| 07 | கணக்கீடு<br>அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்<br>தரம் 12<br>**உற்பத்தி வணிகம்** |
|---|---|

# பகுதி 1

## வினாக்கள்

### <u>07. உற்பத்தி வணிகம்</u>

01. லக்சிரியினால் நடாத்தப்படும் செங்கல் உற்பத்தி வியாபாரத்தின் 2001.03.31 இல் முடிந்த ஆண்டுத்தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா. |
|---|---|
| களிமண் கொள்வனவு | 1000 000 |
| களிமண்இருப்பு | |
| - 2020.03.31 | 120 000 |
| - 2021.03.31 | 150 000 |
| செங்கல் உற்பத்தி செய்வோரின் சம்பளம் | 600 000 |
| செங்கல் சூளை உள்ள நிலத்திற்கான வாடகை | 800 000 |
| காவலாளியின் சம்பளம் | 500 000 |
| எரிக்கப்படாத செங்கல் இருப்பு | |
| - 2020.03.31 | 180 000 |
| - 2021.03.31 | 120 000 |

ஆண்டு முழுவதும் எரிக்கப்பட்ட செங்கற்களின் மொத்த எண்ணிக்கை 150 000 அலகுகள் ஆகும்.

1. லக்சிரி வணிகத்தின் முதன்மை செலவு என்ன?
   1.ரூ. 1030 000 2. ரூ. 1570 000 3. ரூ. 1630 000
   4. ரூ. 2370 000 5. ரூ.2430 000

2. மொத்த உற்பத்தி செலவு என்ன?
   1.ரூ. 1570 000 2. ரூ.1630 000 3. ரூ. 2870 000
   4. ரூ.2930 000 5. ரூ.2990 000

3. ஒரு அலகுக்கான செலவு என்ன?
   1.ரூ. 10.47 2. ரூ.10.87 3. ரூ.19.13
   4. ரூ.19.53 5. ரூ.25.27

02. ஒரு நிறுவனம் தொடர்பான பின்வரும் தகவல்கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

| | ரூபா.000 |
|---|---|
| பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் கிரயம் | 2000 |
| நேர் கூலி | 800 |
| நேர் ஏனைய கிரயம் | 400 |
| குறைவேலை இருப்புக்களின் அதிகரிப்பு | 100 |
| பொது மேந்தலை கிரயம் | 500 |

BUSINESS & COMMERCE BRANCH

நிறுவனத்தின் குறைவேலை இருப்புக்கள் உற்பத்திகிரயத்துடன் தொடர்புடையதுடன், பொது மேந்தலை கிரயங்களில் 1/2 பங்கு உற்பத்தியுடன் தொடர்புடையதாகவுள்ளது.

1. மேலே உள்ள நிறுவனத்தின் முதன்மைக்கிரயம் யாது?
2. உற்பத்திக்கிரயம் யாது?
3. 10 000 அலகுகள் உற்பத்தி செய்வதாக இருப்பின், அலகுக்கான கிரயம் யாது?
4. அலகுக்கான கிரயத்தில் 10% இலாபம் சேர்த்து விற்பனை செய்யப்படுமாயின் ஒரு அலகுக்கான விற்பனை விலை யாது?

03. 2021.03.31 ல் முடிவடைந்த ஆண்டு தொடர்பான உற்பத்தி நிறுவனத்தின் முதன்மை கிரயம் மற்றும் அமாத்த உற்பத்திசெலவு முறையே ரூ.550 000, ரூ.1850 000 ஆகும். 2020.03.31 மற்றும் 2021.03.31 ஆகிய தினங்களில் உற்பத்தி கிரயத்தில் அளவிடப்பட்ட குறைவேலை இருப்புக்களின் பெறுமதி முறையே ரூ.150 000 மற்றும் ரூ.210 000 ஆகும். 2021.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்திமேந்தலை கிரயம் யாது?

1. ரூ.340 000
2. ரூ.550 000
3. ரூ.1300 000
4. ரூ.1360 000
5. ரூ.1910 000

04. உற்பத்தி நிறுவனமொன்றின் 2021 மார்ச் மாதத்திற்கான தகவல்கள் பின்வருமாறு

| | | ரூ.000 |
|---|---|---|
| குறைவேலை இருப்புக்களின் அதிகரிப்பு (மொத்த உற்பத்திகிரயத்தின் படி) | | 150 |
| மூலப்பொருட்களின் குறைவு | | 200 |
| நுகரப்பட்ட மூலப்பொருள் கிரயம் | | 3350 |
| நேரடி சம்பளம் | | 95 |
| பொது மேந்தலை கிரயம் | - தொழிற்சாலை | 75 |
| | - அலுவலகம் | 20 |
| மூலப்பொருள் கொள்வனவு | | 1200 |

2021 மார்ச் மாதத்திற்கான முதன்மைகிரயம் மற்றும் விற்பனைக்கிரயம் யாது?

| | முதன்மைக்கிரயம் (ரூ000) | விற்பனைக்கிரயம் (ரூ000) |
|---|---|---|
| 1. | 3295 | 3370 |
| 2. | 3295 | 4570 |
| 3. | 3445 | 4770 |
| 4. | 3445 | 3370 |
| 5. | 3350 | 4770 |

05. கீழே தரப்பட்டுள்ள தகவல் சரியா? பிழையான என குறிப்பிடுக.

1. நேர் மூலப்பொருள், நேர் கூலி, நேர்ஏனைய செலவு ஆகிய மூன்றும் முதன்மைக்கிரயத்தில் உள்ளடக்கப்படும். ( )
2. மொத்த உற்பத்திக்கிரயம், முதன்மைக்கிரயம் ஆகிய இரண்டும் உற்பத்தி மேந்தலைகிரயத்திற்கு சமனாகும். ( )
3. உறபத்தி மேந்தலை கிரயத்தின் ஒரு பகுதியாக நுகரப்பட்ட மூலப்பொருள் கிரயத்தை குறிப்பிடலாம். ( )

BUSINESS & COMMERCE BRANCH

4. உற்பத்தி நிறுவனமொன்றில் விற்கத் தயாரான பொருட்களின் கிரயத்தினுள் மொத்த உற்பத்திகிரயமும் உள்ளடங்கும். ( )
5. உற்பத்தியல்லாத மேந்தலைக்கிரயமானது இலாபக்கணிப்பீட்டின் போதும் சேர்த்துக்கொள்ளப்படாது. ( )
6. நுகரப்பட்ட கிரயத்தின் சதவீதமாக இலாபம் கணிக்கப்படும். ( )

BUSINESS & COMMERCE BRANCH